## அழைத்தால் கிடைக்கும் செவிலி

இது ஒரு விக்ரோரிய அரசாங்கத்தின் உடல் நல முயற்சி. இது 24 மணித்தியாலமும் வாரத்தின் ஏழு நாட்களிலும் ஒரு பதிவுபெற்ற தாதியின் மூலம் தொலைபேசியூடாக வழங்கப்படும் ஓர் நிபுணத்துவம் மிக்க உடல் நல அறிவுரைச் சேவை.

விக்ரோரியாவில்*எங்கிருந்தும் ஒரு உள்ளூர் அழைப்பின் செலவுக்கு 1300 60 60 24 ஐ அழையுங்கள்



## அழைத்தால் கிடைக்கும் செவிலி

# 1300 60 60 24

சகல விக்ரோரிய வாழ் மக்களுக்கும் 24 மணிநேர உடல்நல அறிவுரை

அழைத்தால் கிடைக்கும் செவிலி ஆங்கிலத்தில் பரிச்சயம் இல்லாதவர்களுக்கு மொழிபெயர்த்துரைக்கும் சேவைகளை வழங்குகிறது.

செவிப்புலன் அல்லது பேச்சுத் தடங்கல் உள்ளவர்களும் இச்சேவையை தேசிய அஞ்சல் சேவை (National Relay Service) மூலம் அணுகலாம். TTY யைப் பயன்படுத்துவோர் 133 677 ஐ அழைக்க வேண்டும். இணைய அஞ்சல் உபயோகிப்போர் வலைத்தளம் www.relayservice.com.au ற்கு செல்லவேண்டும

அழைத்தால் கிடைக்கும் செவிலி பற்றிய கூடுதலான தகவலுக்கு www.health.vic.au/nurseoncall லிற்குச் செல்லவும்.

இந்தப் பிரசுரத்தை நீங்கள் அடையத்தக்க வடிவத்தில் பெற விரும்பினால் தயவு செய்து தொலைபேசித் தகவல் விக்ரோரியாவை 1300 366 356 இல் அல்லது தேவைப்பட்டால் தேசிய அஞ்சல் சேவை 13 36 77 ஐ உபயோகித்து +613 9603 9900 இல் அழையுங்கள்.

இந்த ஆவணம் PDF வடிவத்தில் www.health.vic.gov.au/nurseoncall இல் கிடைக்கும். இது மெல்பர்ண், விக்ரோரியாவிலிருக்கும் நலமாயிருத்தல், ஒருங்கிணைக்கப்பட்ட கவனிப்பு மற்றும் முதியோர் பிரிவு, விக்ரோரிய அரசாங்கம், உடல்நலத் திணைக்களம், ஆகிய நிறுவனங்களினால் பிரசுரிக்கப்படுகிறது.

© பதிப்புரிமை, உடல்நலத் திணைக்களம், விக்ரோரிய மாநிலம், 2011

இந்தப் பிரசுரம் பதிப்புரிமையுடையது, இதன் எப்பகுதியையும் பதிப்புரிமைச் சட்டம் 1968 இன் கட்டுப்பாட்டு விதிகளிற்கடங்கினாலன்றி எந்தச் செயல்முறையினாலும் மீள் ஆக்கம் செய்யப்படக் கூடாது.

உடல்நலத் திணைக்களம் (1103039) செயலாளர் பிறான் தோன் (Fran Thorn) இனால் அதிகாரமளிக்கப்படுகிறது மார்ச்சு 2011

State Government Victoria

Tamil

# இப்போது ஒவ்வொரு விக்ரோரிய பிரஜைக்கும் அழைத்தால் கிடைக்கும் செவிலி இருக்கிறது.

# 1300 60 60 24



தொலைபேசியூடாக நாளாந்தம் 24 மணித்தியாலங்களும் உடல்நலத் தகவல

ஜூளி - பதிவு செய்யப்பட்ட தாதி



## உங்களுக்குத் தேவைப்படும் வேளையில் நாங்கள் அங்கே இருப்போம்.

அழைத்தால் கிடைக்கும் செவிலி உங்களை எந் நேரமும் நேரடியாக உத்தியோகபூர்வமான உடல்நல அறிவுரைக்கு ஒரு பதிவுசெய்யப்பட்ட தாதியுடன் தொடர்பை ஏற்படுத்தும். அவசர நிலைமைகளின் போது நீங்கள் எப்போதும் 000 ஐ அழைக்க வேண்டும் ஆனால் வேறு சமயங்களில் உடல்நல அறிவுரைக்கு அழைத்தால் கிடைக்கும் செவிலி உங்களுக்குள்ள சிறந்த தெரிவு. உதாரணமாக:

- நீங்கள் அல்லது நீங்கள் கவனிக்கும் ஒருவர் சுகயீனமுற்றால்
- நடு இரவு வேளை உங்களுக்கு வைத்திய உதவி தேவையா என்று நீங்கள் ஐயுறும் போது
- நீங்கள் வீட்டிற்கு அப்பால் அல்லது வைத்திய வசதி வெகு தொலைவில் இருக்கும் இடமொன்றில் நீங்கள் இருக்கும் போது
- உங்களுக்கு சாதாரணமாக உங்களது பகுதியில் கிடைக்கப்பெறும் உடல்நல அறிவுரை அல்லது தகவல் ஆகியவற்றை அறிய விரும்பினால்.

உடல்நலம் சம்பந்தமான எதாவது விடயங்களைக் கலந்தாலோசிக்க விரும்பினால் அழைத்தால் கிடைக்கும் செவிலியை அழைக்கத் தயங்க வேண்டாம். இலகுவாக விக்ரோரியாவில் எங்கிருந்தும் ஒரு உள்ளூர் அழைப்பின் செலவுக்கு*1300 60 60 24 ஐ அழையுங்கள்.

## நான் உடல்நல அறிவுரை கேட்டபின் என்ன நடக்கும்?

**படி 1**- ஒரு பதிவு செய்யப்பட்ட தாதி உங்களது அழைப்பிற்கு பதிலளித்து சில அடிப்படை விவரங்களைச் சேகரிப்பார்.

**படி 2**- அதன் பின் தாதி உங்களது உடல்நலம் சம்பந்தமான அறிகுறிகள் மற்றும் வேறு விடயங்களைப்பற்றி கேள்விகள் சிலவற்றைக் கேட்பார்.

**படி 3**- அழைப்பின் முடிவில் தாதி உங்களை நீங்களே கவனிக்க சில வழிகளைச் சொல்வார் உங்களது குடும்ப வைத்தியரை தொடர்பு கொள்ளும்படி ஆலோசனை வழங்குவார் அல்லது நிலைமை கடுமையென்றால் அழைப்பை 000 க்கு இட மாற்றம் செய்வார்.

தாதி உங்களது அறிகுறிகளுக்கு ஒரு முற்றான நோய் குறி அறிதலை வழங்கமாட்டார் என்பதைக் குறித்துக் கொள்ளுங்கள்.

தாதிகள் நாளிதுவரைக்கும் சரிபார்க்கப்பட்ட உடல் நலத் தகவலை உபயோகித்து நீங்கள் அழைக்கும் விடயத்திற்குரிய உயர்ந்தரக அறிவுரையை வழங்குவார்.

நிச்சயமாக நீங்கள் வழங்கும் தகவல்கள் யாவும் நம்பகமாக வைத்திருக்கப்படும் மற்றும் பதிவுகள் யாவும் முற்றாக பாதுகாப்பில் வைக்கப்படும்.

## உடல்நல அறிவுரை, அத்துடன் கூட

அழைத்தால் கிடைக்கும் செவிலியினால் உங்களது பகுதியிலிருக்கும் உடல் நல சேவைகள் பற்றிய விவரங்கள் அல்லது வேறு தொலைபேசி உதவி இலக்கங்கள் போன்ற வேறு உடல் நல சம்பந்தமான தகவல்களையும் வழங்க முடியும்.

அழைத்தால் கிடைக்கும் செவிலி எல்லா விக்ரோரிய வாழ் மக்களுக்கும் எந்நேரமும் பகலிலோ இரவிலோ உத்தியோகபூர்வமான உடல்நல அறிவுரை ஒரு தொலைபேசி அழைப்புத் தூரத்தில் கிடைக்கக்கூடியதாக இருப்பதால் அழைத்தால் கிடைக்கும் செவிலி எல்லா விக்ரோரிய வாழ் மக்களுக்கும் மன நிம்மதியைக் கொடுக்கிறது.

## அழைத்தால் கிடைக்கும் செவிலி 1300 60 60 24

உங்களுக்காக ஒவ்வொரு நிமிடத்திலிலுள்ள 60 வினாடிகளும் ஒவ்வொரு மணித்தியாலத்திலுள்ள 60 நிமிடங்களும் ஒரு நாளில் 24 மணித்தியாலங்களும் விக்ரோரியாவிலிருந்து இயங்குகிறது.

*நடமாடும் தொலைபேசி அழைப்புகளுக்கு உயர்ந்த கட்டணம் அறவிடப்படும்


Christine - Registered nurse

**ஒரு அவசர நிலைமையின் போது அல்லது உயிருக்கு ஆபத்தான நிலைமைகளில் நீங்கள் எப்போதும் 000 ஐ அழைக்க வேண்டும்**